# தமிழ்நாடு உள்ளாட்சி அமைப்புகள் முறைமன்ற நடுவம்

எண்.100 அண்ணா சாலை, கிண்டி, சென்னை – 600 032
தொலைபேசி 044–22201337
மின்னஞ்சல் முகவரி : ombudsmanlocal@tn.gov.in

முன்னிலை : மகேசன் காசிராஜன், இ.ஆ.ப. (ஓ)
தமிழ்நாடு உள்ளாட்சி அமைப்புகள் முறைமன்ற நடுவர்

**ஆணை எண். 47/ந/2026, நாள் 26.05.2026**

| | | |
|---|---|---|
| திரு. எம். ஷேக் முஹம்மது அலி,<br>மாங்காடு, சென்னை. | – | முறையீட்டு மனுதாரர் |
| நகராட்சி ஆணையர்,<br>மாங்காடு நகராட்சி, காஞ்சிபுரம் மாவட்டம். | – | எதிர்மனுதாரர் |

சென்னை, மாங்காடு, சையத் சாதிக் நகர், பிளாட் எண். 411 என்கிற முகவரியில் வசிக்கும் திரு. எம். ஷேக் முஹம்மது அலி என்பவரது 13.02.2026 நாளிட்ட மனு இம்முறைமன்ற நடுவத்தில் 16.02.2026 அன்று பெறப்பட்டு 47/ந/2026 என எண்ணிட்ட முறையீட்டு மனுவாக பதிவு செய்யப்பட்டது. மனுதாரரின் முறையீட்டு மனு பரிசீலிக்கப்பட்டு கீழ்க்காணும் ஆணை வெளியிடப்படுகிறது.

**ஆணை**

சென்னை, மாங்காடு, சையத் சாதிக் நகர், பிளாட் எண். 411 என்கிற முகவரியில் வசிக்கும் திரு. எம். ஷேக் முஹம்மது அலி என்பவரின் 13.02.2026 நாளிட்ட முறையீட்டு மனுவில் கீழ்க்காணும் புகார்கள் தெரிவிக்கப்பட்டுள்ளது.

"எங்கள் பகுதியான சென்னை -600 122, மாங்காடு, எத்திராஜ் நகர் 3வது குறுக்குத் தெரு, வார்டு எண். 16, புதிய வார்டு எண். 4ல் ஒவ்வொரு ஆண்டும் மழைக்காலங்களில் மேற்சொன்ன பகுதிகள் மற்றும் அதனை ஒட்டியுள்ள பகுதிகளில் மழைநீர் சூழ்ந்து வெள்ளக்காடாக மாறிவிடும். அதனால் எங்கள் பகுதி பொதுமக்கள் பல இன்னல்களுக்கு ஆளாகி வருகிறோம். இதுகுறித்து கழிவு நீர் வடிகால் கால்வாய் கோரியும் மற்றும் மழைநீர் வடிகால் கோரியும், அதேபோல் தெரு நாய்கள் தொல்லைகள் குறித்தும் பல முறை பதிவு தபாலிலும் மற்றும் நேரிலும் புகார் அனுப்பியும் இதுநாள் வரை எந்தவிதமான நடவடிக்கையும் எடுக்கப்படவில்லை. அதனால் ஒவ்வொரு ஆண்டும் மழைக்காலங்களில் குடியிருப்புவாசிகள் பெரும் பாதிப்புக்குள்ளாக வேண்டிய அவலை நிலையில் உள்ளது. அதே போல் தெரு நாய்கள் தொல்லையால் சிறு குழந்தைகள் முதல் பெரியவர்கள் வரை ரோட்டில் நடந்து செல்ல முடியாமல் ஒருவிதமான உயிர்பயத்துடன் வாழவேண்டியுள்ளது. எத்திராஜ் பகுதியை தவிர்த்து, அதனை சுற்றிலுள்ள தெருக்களில் மழை நீர் வடிகால் மற்றும் கழிவு நீர் வடிகால்வாய் அமைத்துள்ளனர். ஆனால், எங்கள் பகுதிக்கு மட்டும் செயல்படுத்தவில்லை. அதுபற்றி நகராட்சி நிர்வாகத்திடம் கேட்டால் எந்தவிதமான பதிலும் இல்லை. எங்களுடைய புகார் குறித்து RTI கேட்டால் சரியான பதிலும் தருவதில்லை. என் சார்பாகவும் பொதுமக்கள் சார்பாகவும் கொடுக்கப்பட்டுள்ள புகாரின் நகலினை இத்துடன் தங்கள் பார்வைக்கு இணைத்துள்ளேன். அதேபோல் மழைக்காலங்களில் எடுக்கப்பட்டுள்ள புகைப்படத்தின் நகலினை இத்துடன் இணைத்துள்ளேன். கடந்த 2023 முதல் இதுநாள் வரை நாங்கள் கொடுத்த புகார் மீது நடவடிக்கை எடுக்காத நகராட்சி ஆணையாளர் மற்றும் கீழே குறிப்பிடப்பட்டுள்ள சம்மந்தப்பட்ட நிர்வாகம் மற்றும் அதனுடன் தொடர்புடைய அதிகாரிகள் மீதும் வழக்கினை பதிவு செய்யும்படி கேட்டுக்கொள்கிறேன்.".

2) முறையீட்டு மனுதாரரின் புகார் மனு மீதான அறிக்கையை அனுப்புமாறு தமிழ்நாடு உள்ளாட்சி அமைப்புகள் முறைமன்ற நடுவத்தின் 23.02.2026 நாளிட்ட அறிவிப்பு மூலம் மாங்காடு நகராட்சி ஆணையரை கேட்டுக்கொள்ளப்பட்டது.

3) மாங்காடு நகராட்சி ஆணையரின் கடிதம் ந.க. எண். 182/2026/இ11 & எச் 1, நாள் 05.03.2026ல் மனுதாரரின் குற்றச்சாட்டுக்களுக்கு முறையே கீழ்கண்டவாறு விளக்கம் அளித்துள்ளார். அதில்–

"இந்நகராட்சி எல்லைக்குட்பட்ட வார்டு எண். 04, எத்திராஜ் நகர், 3வது குறுக்குத் தெரு, பகுதியில் உள்ள இடத்தினை நேரில் சென்று ஆய்வு செய்யப்பட்டதில், மேற்படி பகுதியில் மழைநீர் கால்வாய் அல்லது கழிவு நீர்கால்வாய் (பாதாளசாக்கடை) வேண்டும் என்று தெரிவித்துள்ளார். அப்பகுதியில் மழைநீர் கால்வாய் அமைக்கவும், மழைநீர் செல்வதற்கு வழி (level) இல்லை என்பதால், இப்பகுதியில் மழைநீர் கால்வாய் அமைக்க இயலாது. மேலும், தற்போது மாங்காடு நகராட்சி எல்லைக்குட்பட்ட அனைத்து பகுதிகளிலும் பாதாள சாக்கடை திட்டம் அமைக்கும் பணிக்கு ஒப்பந்தப்புள்ளி கோரி அதற்கான பணிகள் (Tender Process) நடைமுறையில் உள்ளதால், விரைவில் நகராட்சி அனைத்து பகுதிகளிலும் மற்றும் மனுதாரரால் குறிப்பிடப்பட்டுள்ள பகுதிகளிலும் பாதாள சாக்கடை அமைக்கும் பணி செயல்படுத்தப்படும் என்ற விவரத்தினை மனுதாரருக்கு தெரிவிக்கப்பட்டுள்ளது என்ற விபரத்தினை பணிவுடன் தெரிவித்துக்கொள்கிறேன்.

மாங்காடு நகராட்சி எல்லைக்குட்பட்ட பகுதிகளில் இதுவரை 1241 தெரு நாய்கள் கண்டறியப்பட்டுள்ளது. இதில் அரசின் வழிகாட்டுதலின்படி 420 தெரு நாய்களுக்கு Blue Cross NGO மூலம் ABC மற்றும் ARV முறையில் சிகிச்சை அளிக்கப்பட்டுள்ளது. மேலும், மீதமுள்ள தெருநாய்களுக்கு வரும் காலங்களில் ARV மற்றும் ABC அளிக்கப்படவுள்ளது. மனுதாரர் தெரிவித்துள்ள எத்திராஜ் நகர் பகுதியில் 5 தெருக்களில் தெருநாய்களை பிடித்து மருத்துவ சிகிச்சை அளிக்கப்படவுள்ளது என்ற விபரம் மனுதாரருக்கு பணிவுடன் தெரிவித்துக்கொள்கிறேன்." என தெரிவித்துள்ளார்.

4) மனுதாரர் மற்றும் எதிர்மனுதாரரான மாங்காடு நகராட்சி ஆணையர் ஆகியோரை 10.04.2026 அன்று நடைபெறவுள்ள விசாரணைக்கு ஆஜராகுமாறு தமிழ்நாடு உள்ளாட்சி அமைப்புகள் முறைமன்ற நடுவத்தின் 25.03.2026 நாளிட்ட அழைப்பாணைகள் அனுப்பப்பட்டன.

5) மனுதாரரின் 10.04.2026 நாளிட்ட மின்னஞ்சல் கடிதத்தில், மனுதாரர் மாண்பமை அம்பத்தூர் நீதிமன்றத்தில் பணிகள் உள்ளதால், 10.04.2026 அன்று நடைபெறவுள்ள விசாரணைக்கு ஆஜராக இயலவில்லை என தெரிவித்து, மேற்படி விசாரணையை வேறொரு தேதிக்கு மாற்றி வழங்குமாறு கேட்டுக்கொண்டுள்ளார்.

6) எதிர்மனுதாரரான மாங்காடு நகராட்சி ஆணையரின் கடிதம் ந.க.எண். 1583/2025/இ1, நாள் 08.04.2026ல் தமிழ்நாடு சட்டமன்ற தேர்தலுக்கான உதவி வாக்காளர் பதிவு அலுவலராக நியமனம் செய்யப்பட்டுள்ளதால், தேர்தல் தொடர்பான பணி மேற்கொள்ள வேண்டியுள்ளதால் மாங்காடு நகராட்சி பொறியாளர் திரு வி. குமார் என்பர் 10.04.2026 அன்று நடைபெறவுள்ள விசாரணையில் ஆஜராவார் என தெரிவித்துக் கொள்ளப்பட்டதைத் தொடர்ந்து, மாங்காடு நகராட்சி பொறியாளர் திரு வி. குமார் என்பர் 10.04.2026 அன்று நடைபெற்ற விசாரணையில் ஆஜராகி தமிழ்நாடு உள்ளாட்சி அமைப்புகள் முறைமன்ற நடுவர் முன்னிலையில் தனது வாக்குமூலத்தை கீழ்கண்டவாறு பதிவு செய்துள்ளார்.

"மனுதாரர் குறிப்பிட்ட இடத்தினை நேரில் சென்று ஆய்வு செய்யப்பட்டது. அப்பகுதியில் மழைநீர் கால்வாய் அமைப்பதற்கு அவ்விடத்தில் level இல்லை என்பதால், அப்பகுதியில் மழைநீர் கால்வாய் அமைக்க இயலாது என்பதை தெரிவித்துக்கொள்கிறேன்.

இருப்பினும், தற்போது மாங்காடு நகராட்சி எல்லைக்குட்பட்ட அனைத்து பகுதிகளிலும் பாதாள சாக்கடை அமைக்கும் பணிக்கு ஒப்பந்தப்புள்ளி கோரப்பட்டுள்ளது. அதற்கான பணிகள் நடைமுறையில் உள்ளதால் மனுதாரர் கோரியுள்ள பகுதிகளில் பாதாள சாக்கடை அமைக்கும் பணி செயல்படுத்தப்படும். இத்தகவல் மனுதாரருக்கும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

தற்பொழுது (Model Code of Conduct) தேர்தல் நன்னடத்தை விதிகள் அமலில் இருப்பதால், தேர்தல் முடிந்தவுடன் மேற்கண்ட பணிகளை செய்து முடிப்பதற்கு உரிய நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படும் என தெரிவிக்கப்படுகிறது.

மாங்காடு நகராட்சி எல்லைக்குட்பட்ட பகுதிகளில் 1241 தெரு நாய்கள் கண்டறியப்பட்டு, அரசின் வழிகாட்டுதல்களின்படி 420 தெருநாய்களுக்கு Blue Cross NGO மூலம் ABC மற்றும் ARV சிகிச்சை அளிக்கப்பட்டுள்ளது. வருங்காலங்களில் மீதம் உள்ள நாய்களுக்கும் ARV மற்றும் ABC சிகிச்சை அளிக்கப்படும் என்பதை தெரிவித்துக்கொள்ளப்படுகிறது.

மேலும், எத்திராஜ் பகுதியில் 5 தெருக்களில் உள்ள நாய்களுக்கு மருத்துவ சிகிச்சை அளிக்கப்பட உள்ளது என்பதையும் இம்முறைமன்ற நடுவத்தில் பணிந்து சமர்ப்பித்துக்கொள்கிறேன்.''

7) மனுதாரரின் கோரிக்கையை ஏற்று 15.05.2026 அன்று நடைபெறவுள்ள விசாரணைக்கு ஆஜராகுமாறு இம்முறைமன்ற நடுவத்தின் 13.04.2026 நாளிட்ட அழைப்பாணை மனுதாரருக்கு முகவரியிடப்பட்டு எதிர்மனுதாரரான மாங்காடு நகராட்சி ஆணையருக்கு நகலிடப்பட்டு அனுப்பட்டுள்ளது.

8) மனுதாரரின் 11.05.2026 நாளிட்ட மின்னஞ்சலில் 15.05.2026 அன்று நடைபெறவுள்ள விசாரணை நேரத்தில் ஆஜராக இயலாது என தெரிவித்து மேற்படி விசாரணையை அன்றைய தினம் பிற்பகல் 2.30 மணிக்கு மாற்றிட கேட்டுக்கொண்டதைத் தொடர்ந்து 19.05.2026 அன்று நடைபெறவுள்ள விசாரணைக்கு ஆஜராகுமாறு இம்முறைமன்ற நடுவத்தின் 12.05.2026 நாளிட்ட அழைப்பாணை மனுதாரருக்கு முகவரியிடப்பட்டு, எதிர்மனுதாரரான மாங்காடு நகராட்சி ஆணையருக்கு நகலிடப்பட்டு அனுப்பப்பட்டது.

9) மனுதாரர் 19.05.2026 அன்று நடைப்பெற்ற விசாரணையில் ஆஜராகி தமிழ்நாடு உள்ளாட்சி அமைப்புகள் முறைமன்ற நடுவர் முன்னிலையில் தனது வாக்குமூலத்தில் கீழ்க்கண்டவாறு பதிவு செய்துள்ளார்.

"சென்னை, மாங்காடு, எத்திராஜ், 3வது குறுக்குத்தெரு மற்றும் அதனை சுற்றியுள்ள பகுதிகளில் மழைக்காலங்களில் ஒவ்வொரு வருடமும் மழைநீரால் சூழப்படுவதால், குடியிருப்புவாசிகள் பெரும் பாதிப்புக்குள்ளாகின்றனர். இப்பகுதியை சுற்றியுள்ள தெருக்களில் மழைநீர் வடிகால் மற்றும் கழிவுநீர் வடிகால் வாய்க்கால்கள் அமைக்கப்பட்டுள்ளது. ஆனால், இப்பகுதிக்கு மட்டும் அமைக்கப்படாமல் உள்ளது.

மேலும், தெருக்களில் உள்ள தெருநாய்கள் தொல்லை 60 சதவீதம் அளவிற்கு குறைக்கப்பட்டுள்ளது.

தகவல் பெறும் உரிமைச் சட்டம், 2005ன் கீழ் 2023ல் அளிக்கப்பட்ட எனது மனுவிற்கு மழைநீர் வடிகால் அமைக்கும்பணி தயார் நிலையில் உள்ளது என வழங்கப்பட்டுள்ளது. ஆனால், எவ்விதமான பணியும் நடைபெறவில்லை. மேலும், மேற்படி பணிக்காக ஒதுக்கப்பட்ட நிதியினை செலவிடப்பட்டுள்ளதா என்ற விவரம் தெரிவிக்கப்படவில்லை. பணி ஆணை இதுவரை வழங்கப்படவில்லை. எங்களது பகுதியைத்தவிர பிற பகுதிகளுக்கு மழைநீர் வடிகால் பணிகள் செய்து முடிக்கப்பட்டுள்ளது. எனவே எங்களது பகுதிக்கு மழைநீர் வடிகால் அமைக்கும் பணியினை விரைந்து முடித்திட நடவடிக்கை மேற்கொண்டு உதவிடுமாறு மாண்புமிகு முறைமன்ற நடுவர் அவர்களை பணிவுடன் வேண்டிக்கேட்டுக்கொள்கிறேன்.''

10) எதிர்மனுதாரரான மாங்காடு நகராட்சி ஆணையரின் கடிதம் ந.க.எண்.1583/2025/இ1, நாள் 18.05.2026ல் காஞ்சிபுரம் மாவட்ட ஆட்சியரின் அவசர அலுவலக நேர்காணல் கூட்டத்தில் கலந்து கொள்ள வேண்டியுள்ளதால், மாங்காடு நகராட்சி பொறியாளர் திரு வி. குமார் என்பவர் 19.05.2026 அன்று நடைபெறவுள்ள விசாரணையில் ஆஜராவார் என தெரிவித்துக் கொள்ளப்பட்டதைத் தொடர்ந்து, மாங்காடு நகராட்சி பொறியாளர் திரு வி. குமார் என்பவர் 19.05.2026 அன்று நடைபெற்ற விசாரணையில் ஆஜராகி தமிழ் நாடு உள்ளாட்சி அமைப்புகள் முறைமன்ற நடுவர் முன்னிலையில் தனது வாக்குமூலத்தை கீழ்கண்டவாறு பதிவு செய்துள்ளார்.

''மனுதாரரால் புகாரில் தெரிவிக்கப்பட்டுள்ள பகுதிக்கு பாதாள சாக்கடை திட்டம் அமைக்கும் பணிக்கு நிதி ஒதுக்கப்பட்டுள்ளது. பணி ஆணை இன்னும் வழங்கப்படவில்லை. விரைவில் பணி ஆணை வழங்கி மேற்படி பணியினை இன்னும் இரண்டு மாத காலத்திற்குள் பணியினை ஆரம்பிக்க உரிய நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படும்.

மேற்படி மனுதாரர் குறிப்பிட்டுள்ள பகுதியானது Low level area–வாக உள்ள காரணத்தினாலும், மழைநீர் செல்வதற்கு வழிவகை இல்லாத காரணத்தினாலும், மழைநீர் வடிகால் அமைக்கும் பணி மேற்கொள்ள இயலவில்லை. எனவே, பாதாள சாக்கடை திட்டம் அமைக்கும் பணி தொடங்கப்பட்டு முடிவுற்ற பின்னர்தான் மேற்படி பகுதியில் மழைநீர் தேங்குவதை தடுக்க இயலும். இதற்கிடையில் மனுதாரர் கேட்டுக்கொண்டபடி மீண்டும் அப்பகுதியை நன்கு ஆய்வு செய்து மழைநீர் செல்ல ஏதேனும் வழிவகை இருப்பின் அதன்படி நடவடிக்கை எடுக்கப்படும் என்பதனை இம்முறைமன்ற நடுவத்தில் பணிவுடன் தெரிவித்துக்கொள்ளப்படுகிறது.''

11) மனுதாரரின் புகார் மனு, வாக்குமூலம், எதிர்மனுதாரரான மாங்காடு நகராட்சி ஆணையரின் அறிக்கை மற்றும் மாங்காடு நகராட்சி பொறியாளரின் வாக்குமூலங்கள் மற்றும் தொடர்புடைய ஆவணங்கள் இம்முறைமன்ற நடுவத்தில் கவனமுடன் பரிசீலிக்கப்பட்டு கீழ்க்கண்ட விவரங்கள் கண்டறியப்பட்டன.

சென்னை, மாங்காடு, எத்திராஜ் நகர் 3வது குறுக்குத் தெரு, வார்டு எண். 16, புதிய வார்டு எண். 4ல் உள்ள பகுதிகள் மற்றும் அதனை ஒட்டியுள்ள பகுதிகளில் ஆண்டுதோறும் பருவ மழைக்காலங்களில் மழைநீர் சூழ்ந்து வெள்ளக்காடாக உள்ளது என்பதும், மனுதாரரின் பகுதியை சுற்றியுள்ள தெருக்களில் மழைநீர் வடிகால் மற்றும் கழிவுநீர் வடிகால் வாய்க்கால்கள் அமைக்கப்பட்டுள்ளது என்பதும், மனுதாரரால் குறிப்பிடப்பட்டுள்ள பகுதியில் கழிவு நீர் வடிகால் கால்வாய் மற்றும் மழைநீர் வடிகால் அமைக்க கோரி அளிக்கப்பட்ட புகார்களுக்கு நகராட்சி நடவடிக்கை எடுக்கவில்லை என்பதும், இதனால் மழைக்காலங்களில் குடியிருப்புவாசிகள் பெரும்பாதிப்பு அடைகின்றனர் என்பதும், தெரு நாய்கள் தொல்லை குறித்து அளிக்கப்பட்ட புகார்களுக்கும் நகராட்சி நடவடிக்கையும் எடுக்கவில்லை என்பதும், தெருநாய் தொல்லையால் குழந்தைகள் முதல் பெரியவர்கள் வரை தெருக்களில் நடந்து செல்ல இயலாமல், உயிர்பயத்துடன் வாழவேண்டியுள்ளது என்பதும், தகவல் பெறும் உரிமைச் சட்டம், 2005ன் கீழ் 2023ல் அளிக்கப்பட்ட மனுவிற்கு மழைநீர் வடிகால் அமைக்கும் பணி தயார் நிலையில் உள்ளதாக தெரிவிக்கப்பட்டுள்ளது என்பதும், எனினும் மேற்படி பணிகள் மேற்கொள்வதற்கான பணி ஆணை வழங்கப்படாமல், பணியும் நடைபெறாமல் உள்ளது என்பதும், இதற்காக ஒதுக்கப்பட்ட நிதி செலவிடப்பட்டதற்கான விவரம் வழங்கவில்லை என்பதும், மனுதாரரின் புகாரில் தெரிவிக்கப்பட்டுள்ள பகுதிக்கு மழைநீர் வடிகால் மற்றும் கழிவுநீர் கால்வாய் அமைத்து தரவேண்டியும், தெருநாய்கள் மீது நடவடிக்கை மேற்கொள்ள மனுதாரர் இம்முறைமன்ற நடுவத்தை நாடியுள்ளார் என்பது மனுதாரரின் புகார் மனு மற்றும் வாக்குமூலத்திலிருந்து அறியவருகிறது.

மனுதாராரின் புகாரில் குறிப்பிடப்பட்டுள்ள பகுதி நேராய்வு செய்யப்பட்டதில், மேற்படி பகுதி Low level area–வாக உள்ளதால் மழைநீர் செல்வதற்கான வழி இல்லாததால், மழைநீர் கால்வாய் அமைக்க இயலவில்லை என்பதும், மாங்காடு நகராட்சி எல்லைக்குட்பட்ட அனைத்து பகுதிகளிலும் பாதாள சாக்கடை திட்டம் அமைக்கும் பணிக்கு ஒப்பந்தப்புள்ளி கோரப்பட்டு, பணிகள் மேற்கொள்வதற்கான Tender Process நடைமுறையில் உள்ளது என்பதும், மனுதாரர் கேட்டுக்கொண்டபடி மழைகாலங்களில் மழைநீர் தங்காத வகையில் வெளியேற்ற வழிவகை உள்ளதா என்பதை நன்கு ஆய்வு செய்து நடவடிக்கை எடுக்கப்படும் என்பதும், மனுதாரரால் புகாரில் தெரிவிக்கப்பட்டுள்ள பகுதிக்கு பாதாள சாக்கடை திட்டம் அமைக்கும் பணிக்கு நிதி ஒதுக்கப்பட்டுள்ளதால், மனுதாரரால் குறிப்பிடப்பட்டுள்ள பகுதிகள் உள்பட அனைத்து பகுதிகளிலும் விரைவில் பாதாள சாக்கடை அமைக்கும் பணி செயல்படுத்தப்படும் என்பதும், இவ்விவரம் மனுதாரருக்கு தெரிவிக்கப்பட்டுள்ளது என்பதும் மாங்காடு நகராட்சி ஆணையரின் அறிக்கை மற்றும் மாங்காடு நகராட்சி பொறியாளரின் வாக்குமூலங்களிலிருந்து அறியவருகிறது.

மேலும், மாங்காடு நகராட்சி எல்லைக்குட்பட்ட பகுதிகளில் இதுவரை 1241 தெருநாய்கள் கண்டறியப்பட்டு, அரசின் வழிகாட்டுதலின்படி 420 தெருநாய்களுக்கு Blue Cross NGO மூலம் ABC மற்றும் ARV முறையில் சிகிச்சை அளிக்கப்பட்டுள்ளது என்பதும், மீதமுள்ளவைகளுக்கு வரும் காலங்களில் மேற்படி சிகிச்சை அளிக்கப்படவுள்ளது என்பதும், மனுதாரரால் தெரிவிக்கப்பட்டுள்ள எத்திராஜ் நகர் பகுதியில் 5 தெருக்களில் உள்ள நாய்களுக்கு மருத்துவ சிகிச்சை அளிக்கப்பட உள்ளது என்ற விவரம் மனுதாரருக்கு தெரிவிக்கப்பட்டுள்ளது என்பதும் மாங்காடு நகராட்சி ஆணையரின் அறிக்கை மற்றும் மாங்காடு நகராட்சி பொறியாளரின் வாக்குமூலங்களிலிருந்து அறியவருகிறது.

இந்நேர்வில்,

1) மனுதாரரின் புகாரில் தெரிவித்துள்ள எத்திராஜ் நகர் பகுதியில் பாதாள சாக்கடை திட்டம் அமைக்கும் பணிக்கு நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளதால், விரைவில் பாதாள சாக்கடை அமைக்கும் பணி செயல்படுத்தப்படும் என்ற விவரம் மனுதாரருக்கு தெரிவிக்கப்பட்டுள்ளதால், பாதாள சாக்கடை திட்டம் அமைக்கும் பணி விரைந்து நடைபெற தேவையான துரித நடவடிக்கை மேற்கொள்ளுமாறும், மழைகாலங்களில் மேற்படி பகுதியில் மழைநீர் தேங்காதவாறு தேவையான போர்கால நடவடிக்கைகளை மேற்கொள்ளுமாறும் மாங்காடு நகராட்சி ஆணையரை அறிவுறுத்தி இம்முறைமன்ற நடுவம் ஆணையிடுகிறது.

2) பொதுமக்கள் பாதுகாப்பு கருதி, மாண்பமை உச்சநீதிமன்றம் மற்றும் உயர்நீதிமன்ற ஆணைகளை கருத்திற்கொண்டு எத்திராஜ் நகர் பகுதியில் உள்ள தெரு நாய்களுக்கு தொடந்து மருத்துவ சிகிச்சை அளித்திட தேவையான நடவடிக்கைகள் விரைந்து மேற்கொள்ளுமாறு மாங்காடு நகராட்சி ஆணையரை அறிவுறுத்தி இம்முறைமன்ற நடுவம் ஆணையிடுகிறது.

2026-ஆம் ஆண்டு மே திங்கள் 26-ஆம் நாள் என்னால் கையொப்பமிடப்பட்டு அலுவலக முத்திரையுடன் இவ்வாணை வெளியிடப்படுகிறது.

//ஒப்பம்//
தமிழ்நாடு உள்ளாட்சி அமைப்புகள் முறைமன்ற நடுவர்.

பெறுநர்

1. திரு. எம். ஷேக் முஹம்மது அலி,
   பிளாட் எண். 411, சையத் சாதிக் நகர்,
   மாங்காடு, சென்னை 600 122.
2. நகராட்சி ஆணையர்,
   மாங்காடு நகராட்சி,
   மாங்காடு, சென்னை 600 122.
3. நகராட்சி நிர்வாக இயக்குநர்,
   நகராட்சி நிர்வாக இயக்குநரகம்,
   எண். 75, சாந்தோம் நெடுஞ்சாலை,
   ராஜா அண்ணாமலைபுரம்,
   எம்.ஆர்.சி. நகர், சென்னை 600 028.
4. இணை இயக்குநர்/ஒருங்கிணைப்பாளர் (Nodal Officer),
   நகராட்சி நிர்வாக இயக்குநரகம்,
   எண். 75, சாந்தோம் நெடுஞ்சாலை,
   ராஜா அண்ணாமலைபுரம்,
   எம்.ஆர்.சி. நகர், சென்னை 600 028.

நகல்– மாண்புமிகு முறைமன்ற நடுவர் அவர்களின் தனிச் செயலர்,
இ.கோ./உதிரி.

// ஆணைப்படி /அனுப்பப்படுகிறது //

செயலாளர்.